இன்றைய வேளாண் செய்திகள்

25.05.2013 A.M

## பாரம்பரிய விவசாய பொருள்கள் குறித்த விழிப்புணர்வு பேரணி!




சிதம்பரத்தில் தமிழகஅரசு வேளாண்துறை சார்பில் பள்ளி மாணவர்கள் மற்றும் விவசாயிகள் பங்கேற்ற பாரம்பரிய விவசாய பொருள்கள் குறித்த விழிப்புணர்வு பேரணி சனிக்கிழமை நடைபெற்றது.

பேரணி சிதம்பரம் கீழரதவீதியில் உள்ள வீனஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலிருந்து புறப்பட்டது. பேரணியில் பள்ளி மாணவ, மாணவியர்களும், விதை பண்ணை விவசாயிகள் மற்றும் முன்னோடி விவசாயிகள் பங்கேற்றனர். பேரணியை உதவிஆட்சியர் எல்.சுப்பிரமணியன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். வேளாண் உதவி இயக்குநர் எஸ்.ரமேஷ் முன்னிலை வகித்தார். பள்ளி நிர்வாகி வீனஸ் எஸ்.குமார், தலைமை ஆசிரியர் ஜி.மகேஷ்சுந்தர் ஆகியோர் தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்றனர். பேரணி பாரம்பரிய விவசாய பொருள்களான இளநீர், பருத்தி ஆடைகள், சீயக்காயம், சிறிய தாணிய பயிறுகள் குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் மற்றும் படங்கள் அடங்கிய பதாதைகளுடன் முக்கிய வீதிகள் வழியாக மீண்டும் பள்ளி வளாகத்தை வந்தடைந்தது.

## திருந்திய நெல்சாகுபடி திட்டம்:விவசாயிகளுக்கு காசோலை

உளுந்தூர்பேட்டையில் திருந்திய நெல்சாகுபடி திட்டத்தில் பயிர் செய்த விவசாயிகளுக்கு காசோலை வழங்கும் விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

வட்டார வேளாண்மைத்துறை சார்பில் இந்த விழா நடத்தப்பட்டது.

விழாவில் வேளாண்மை உதவி இயக்குநர் கருணாநிதி பங்கேற்று எம்.குன்னத்தூரைச் சேர்ந்த 30 விவசாயிகளுக்கு தலா ரூ.2 ஆயிரத்துக்கான காசோலைகளை வழங்கினார்.

துணை வேளாண்மை அலுவலர் அலெக்சாண்டர், விரிவாக்க அலுவலர் பொன்.காமராஜ், உதவி வேளாண்மை அலுவலர்கள் மாயவன், அந்தோணிசாமி, வட்டார தொழில்நுட்ப அலுவலர் முத்துலட்சுமி உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

## ஆதிதிராவிட விவசாயக் குழுவுக்கு மானிய விலையில் பவர் டில்லர்

மதுரை மாவட்டம், கள்ளிக்குடி அருகே தென்னமநல்லூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், ஆதிதிராவிட விவசாயக் குழுவிற்கு ரூ.1.15 லட்சம் மதிப்புள்ள பவர் டில்லர் விவசாயக் கருவியை நூறு சதவிகித மானிய விலையில் திருமங்கலம் சட்டப் பேரவை உறுப்பினர் ம. முத்துராமலிங்கம் வழங்கினார்.

அப்போது வேளாண் இணை இயக்குநர் ஜெயசிங் ஞானதுரை, உதவி இயக்குநர் அமுதன் ஆகியோர் உடனிருந்தனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 29.70 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 29.70 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 599 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 250 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.13 டி.எம்.சி.

## சொந்தச் செலவில் அகழி வெட்டும் விவசாயிகள்

வனத்தையொட்டியுள்ள கிராமங்களில் யானைகள் புகுந்து பயிர்களைச் சேதப்படுத்துவதைத் தடுக்க, விவசாயிகள் தங்களது சொந்தச் செலவில் அகழிகளை வெட்டி வருகின்றனர்.

சத்தியமங்கலம் வனக்கோட்டத்தில் குளம், குட்டைகள், ஏரிகள் மற்றும் ஓடைகள் வறண்டு காணப்படுகின்றன. நீர் நிலைகளில் தண்ணீர் இல்லாததால் நிலத்தடி நீர் மட்டமும் குறைந்து வருகிறது. கடும் வறட்சி காரணமாக வனத்தில் பசுந்தழைகள் காய்ந்துவிட்டன. இதனால் யானைகள், மான்கள், காட்டெருமைகள் உள்ளிட்ட வனவிலங்குகளுக்கு குடிநீர் மற்றும் தீவனப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் வனத்தையொட்டிள்ள கிராமங்களில் புகுந்து தோட்டப் பயிர்களைச் சேதப்படுத்தி வருகின்றன.

பவானிசாகர் வனப்பகுதியில் இருந்து யானைகள் அவ்வப்போது வனத்தை விட்டு வெளியேறி கோடேபாளையம், அம்மாபாளையம், நால்ரோடு, தொப்பம்பாளையம், வெள்ளாபாளையம், கரிதொட்டம்பாளையம், அண்ணா நகர், கரும்பபாளையம், புதுரோடு, சொலவனூர், பனையம்பள்ளி, சித்தன்குட்டை கிராமங்களில் புகுந்து அட்டகாசம் செய்கின்றன. பயிர்களை யானைகள் சேதப்படுத்துவதால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தைச் சந்திக்கின்றனர்.

இதையடுத்து, விவசாய நிலங்களுக்குள் யானைகள் நுழைவதைத் தடுக்க வனத் துறை சார்பில் பெரிய அளவிலான அகழிகள் வெட்டப்பட்டு வருகின்றன. சத்தி-மேட்டுப்பாளையம் சாலையோரம் அகழிகள் வெட்டப்பட்டிருந்தாலும் அதில் யானைகள் சர்வ சாதாரணமாக இறங்கிச் செல்கின்றன. இப்போது, கடம்பூர் மலைப் பகுதிகளிலும் யானைகள் தோட்டத்தில் புகுந்து பயிர்களைச் சேதப்படுத்தி வருவதால் அணைக்கரை, எக்கத்தூர் வனத்தையொட்டியுள்ள கிராமங்களில் வனத்துறை சார்பில் பெரிய அகழிகள் வெட்டும் பணி நடைபெற்று வருகிறது.

இதற்கிடையே, பவானிசாகர் பகுதியில் விவசாயிகள் தங்களது பயிர்களைப் பாதுகாக்க சொந்தச் செலவில் அகழிகள் அமைத்து வருகின்றனர். அண்ணா நகர் அருகே இரட்டை சாலைப் பிரிவில் டெல்டா சுரேஷ் என்பவர் தனது தோட்டத்தைச் சுற்றிலும் அகழி அமைத்துள்ளார். இதைத் தொடர்ந்து, விவசாயிகள் பலரும் தங்களது செலவில் அகழி அமைத்து வருகின்றனர்.

## கிடங்குகளில் உரங்கள் வீணாகின்றன

வேலூர் மாவட்டத்தில் உள்ள வேளாண்மை அலுவலகங்களில் உள்ள கிடங்குகளில் விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய உரங்கள் சரிவர வழங்கப்படாமல் அவை காலாவதியாகி வருகின்றன என்று வேலூர் மாவட்ட விவசாயிகள் ஆட்சியரிடம் புகார் தெரிவித்தனர்.

ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது. ஆட்சியர் பொ.சங்கர் தலைமை தாங்கினார். இதில் விவசாயிகள் தெரிவித்த புகார்கள் விவரம்:

தமிழக முதல்வர் சென்னை தவிர பிற மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்துள்ளார். ஆனால் டெல்டா பகுதி விவசாயிகளுக்கு வழங்கப்படும் நிவாரணம் வேலூர் மாவட்டத்துக்குக் கிடைக்கவில்லை. 10 ஆண்டுகளாக வேலூர் மாவட்டம் வறட்சியை சந்தித்து வருவதால் விவசாயிகள் பெரும் பாதிப்புக்கு ஆளாகி வருகின்றனர். இதை கவனத்தில்கொண்டு ஆட்சியர் இவ்விஷயத்தில் அரசிடம் முறையிட்டு உரிய நிவாரணத்தைப் பெற்றுத் தர வேண்டும் என்று விவசாயி சி.கே.தனபால் உள்ளிட்டோர் கோரிக்கை வைத்தனர்.

வறட்சியால் பாதித்த தென்னைகளுக்கு நிவாரணம் வழங்க நடத்தப்பட்ட கணக்கெடுப்பு முறையாக இல்லை. இதனால் விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர். வேளாண் துறையும், வருவாய்த் துறையும் இவ்விஷயத்தில் போதிய கவனம் செலுத்தத் தவறிவிட்டது என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் கூறினர்.

குடியாத்தம் உழவர் சந்தையில் விவசாயிகளிடம் அடையாள அட்டை வழங்க கையூட்டு பெறப்படுகிறது. இதைத் தடுக்க வேண்டும். உழவர் சந்தைகளில் விவசாயிகள் அல்லாத வியாபாரிகளுக்கு அடையாள அட்டை வழங்குவதையும் கண்காணிக்க வேண்டும்.

மாவட்டத்தில் பல இடங்களில் வேளாண்மை அலுவலகக் கிடங்குகளில் தேக்கி வைக்கப்பட்டுள்ள உரங்கள் காலாவதியாகி வருகின்றன.

குறிப்பாக ஆலங்காயம் வேளாண்மை அலுவலகத்தில் உள்ள கிடங்கில் இந்நிலை காணப்படுகிறது. உரங்களை உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு அளித்து உதவிட வேளாண்மை துறைக்கு உத்தரவிட வேண்டும்.

சொட்டுநீர்ப் பாசனம் செயல்படுத்தும் விவசாயிகளுக்கு மானியம் விரைவாக வழங்காமல் அலைகழிக்கப்படுகின்றனர். இதற்கு ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கேட்டுக்கொண்டனர்.

தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் கடனுக்காக விவசாயிகளின் டிராக்டர்களை அடியாள்களை வைத்து மிரட்டி பறிமுதல் செய்வதாக விவசாயிகள் கூறியதை அடுத்து, வங்கிகள் இத்தகைய நடவடிக்கையை கைவிட வேண்டும் என்றும், பறிமுதல் செய்த டிராக்டர்களை மீண்டும் விவசாயிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் ஆட்சியர் கேட்டுக்கொண்டார். இதற்கு விவசாயிகள் ஆட்சியருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

## உழவர் சந்தையில் வரி வசூல் எதிர்ப்பு தெரிவித்து விவசாயிகள் போராட்டம்;பேச்சுவார்த்தையில் பிரச்னைக்குத் தீர்வு

குடியாத்தம் உழவர் சந்தையில் வரி வசூலிக்க விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். பேச்சுவார்த்தைக்குப் பின் பிரச்னைக்கு தீர்வு ஏற்பட்டது.

குடியாத்தம் ராபின்சன் குளக்கரையோரம் 13 ஆண்டுகளாக இயங்கி வரும் உழவர் சந்தையில் 450 விவசாயிகள் வியாபாரம் செய்து கொள்ள அரசு அடையாள அட்டைகள் வழங்கியுள்ளது. நாள் ஒன்றுக்கு சராசரியாக 20-லிருந்து 25 டன் காய்கறிகள் சந்தையில் விற்பனையாகிறது. நாள்தோறும் சுமார் 3 ஆயிரம் பேர் சந்தைக்கு வந்து காய்கறிகளை வாங்கிச் செல்கின்றனர்.

இந்த ஆண்டு தரணம்பேட்டை தினசரி மார்க்கெட்டில் சுங்கம் வசூலித்துக் கொள்ள நகராட்சியில், செந்தில்குமார் என்ற ஒப்பந்ததாரர் ரூ. 36 லட்சத்துக்கு ஏலம் எடுத்தார். கடந்த ஏப்ரல் மாதம் முதல் அவர் வரி வசூலித்து வருகிறார்.

இந்நிலையில், சில நாள்களாக உழவர் சந்தையில் வியாபாரம் செய்யும் விவசாயிகளும் வரி செலுத்த வேண்டும் என ஒப்பந்ததாரர் தரப்பு கட்டாயப்படுத்தி வந்ததாம். இதற்கு உழவர் சந்தை விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

வெள்ளிக்கிழமை காலை அங்கு வந்த ஒப்பந்ததாரர் தரப்பினர் விவசாயிகளை வரி செலுத்த கட்டாயப் படுத்தியுள்ளனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து 150-க்கும் மேற்பட்ட விவசாயிகள் சந்தை வாயிலில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர்.

அதைத் தொடர்ந்து, அவர்கள் ஊர்வலமாக நகராட்சி அலுவலகத்துக்கு வந்து தங்களின் பிரச்னை குறித்து நகராட்சி அதிகாரிகளிடம் மனு அளித்தனர்.

இதற்கிடையில் மாவட்ட ஆட்சியர் பொ. சங்கர் உத்தரவின்பேரில் மாவட்ட வேளாண் துணை இயக்குநர் டி. தனசேகரன் (வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை) தலைமையில் அதிகாரிகள் உழவர் சந்தைக்கு வந்து விவசாயிகளிடம் பிரச்னை குறித்து விசாரணை நடத்தினர். விசாரணை அறிக்கையை ஆட்சியரிடம் அளிப்பதாக கூறிவிட்டு அவர்கள் சென்றனர். பின்னர் இப்பிரச்னை குறித்து வட்டாட்சியர் அலுவலகத்தில், வட்டாட்டசியர் எம். கஜேந்திரன் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில் நகர்மன்றத் தலைவர் அமுதாசிவப்பிரகாசம், விவசாயிகள், ஒப்பந்ததாரர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வரி வசூலிப்பவர்கள் யாரும் இனி உழவர் சந்தைக்குள் செல்லக்கூடாது. உழவர் சந்தை கேட்டில் யாரிடமும் வரி வசூலிக்கக்கூடாது. உழவர் சந்தை எதிரே உள்ள காலியிடத்தில் வியாபாரிகள்

யாரும் கடை வைக்கக்கூடாது என முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து, விவசாயிகள் கலைந்து சென்றனர்.

## கால்நடைகளுக்கு இலவச மருத்துவ முகாம்

கிருஷ்ணகிரி அருகே மல்லிநாயனப்பள்ளியில் தமிழக அரசின் விலையில்லா கறவை மாடுகளுக்கு இலவச மருத்துவமுகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழக அரசின் சிறப்பு திட்டங்களின் கீழ் பயனாளிகளுக்கு விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் ஆடுகள் வழங்கப்பட்டு வருகிறது. நிகழாண்டில் 700 கறவை பசுக்களும் மற்றும் ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த கறவை மாடு மற்றும் ஆடுகளுக்கு 3 மாத்திற்கு ஒரு முறை இலவச மருத்துவ பரிசோதனை மற்றும் குடல் புழு நீக்கம் செய்யப்பட்டு வருகிறது.

இதில், மல்லிநாயனப்பள்ளியில் நடைபெற்ற முகாமை மாவட்ட வருவாய் அலுவலர் சி.பிரகாசம் தொடக்கி வைத்தார். முகாமில் விலையில்லா மாடு மற்றும் ஆடுகளை பெற்ற பயனாளிகள் தங்களது கால்நடைகளைக்கு மருத்துவ பரிசோதனை செய்து கொண்டனர். கால்நடைகளை பராமரிப்பது குறித்த விளக்க கையேடு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், மண்டல இயக்குநர் (பொ) வணங்காமுடி, சிறப்பு அறிஞர் வேடியப்பன், உதவி இயக்குநர் கந்தசாமி, உதவி பேராசிரியர் ரஞ்சித்குமார், வட்டாட்சியர் மகேஸ்வரன் மற்றும் விவசாயிகள் கலந்துக் கொண்டனர்.

## "பண்ணைக் குட்டைகள் அமைக்க விவசாயிகள் ஒத்துழைக்க வேண்டும்'

அரியலூர் மாவட்டத்தில் 3,000 பண்ணைக் குட்டைகள் அமைக்க விவசாயிகள் ஒத்துழைக்க வேண்டும் என்றார் மாவட்ட ஆட்சியர் எம். ரவிக்குமார்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் வேளாண்மைத் துறை சார்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்துக்கு தலைமை வகித்து ஆட்சியர் மேலும் பேசியது:

அரியலூர் மாவட்டத்தில் 2012- 2013 -ம் ஆண்டுக்குள் 3,000 பண்ணைக் குட்டைகள் அமைக்க விவசாயிகள் ஒத்துழைக்க வேண்டும். ஏரி, குளங்களிலிருந்து விவசாயத் தேவைகளுக்காக வண்டல் மண் எடுக்க மனு அளித்தால், அனுமதி அளிக்கப்படும்.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 50% மானியத்தில் உயர் ரக காய்கறி விதைகள், வீரிய ஒட்டு ரக விதைகள் மற்றும் பழக்கன்றுகள் வழங்கப்படும். தேசிய தோட்டக்கலை திட்டம் மூலம் மா, முந்திரி, எலுமிச்சை ஆகிய தோட்டப்பயிர் அமைக்க, பழைய தோட்டத்தைப் புதுப்பிக்க, மலர் சாகுபடி செய்ய ஹெக்டேருக்கு ரூ. 3,000 முதல் ரூ. 45,000 வரை மானியத்தில் இடுபொருள்களும், திசு வாழை சாகுபடிக்கு ஹெக்டேருக்கு ரூ. 31,200 மானியம் வழங்கப்படும்.

மேலும், மண்புழு உரம் தாயரிக்க ஒரு விவசாயிக்கு ரூ. 5 ஆயிரமும், தேசிய சொட்டுநீர்ப் பாசன திட்டத்துக்கு சிறு, குறு விவசாயிகளுக்கு முழு மானியத்தில் 5 ஏக்கர் வரையும், இதர விவசாயிகளுக்கு 70% மானியத்திலும் அதிகபட்சமாக 5 ஹெக்டேர் வரையிலும் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க மானியம் வழங்கப்படும். தேசிய மருத்துவப் பயிர்கள் இயக்கத் திட்டத்தின் கீழ் கண்வலி கிழங்கு சாகுபடிக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ. 68,250 மானியம் வழங்கப்படுகிறது.

அரியலூர் மாவட்டத்தில் 195 கிராமங்களில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் 53,940 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். 20,290 விவசாயிகளுக்கு மண் மாதிரியும், 19,710 விவசாயிகளுக்கு மண்வள அட்டையும் வழங்கப்பட்டன. 1,820 விதமான செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டன. குறுவை பருவத்துக்கு ஏற்ற ஆடுதுறை 36 - 45 ஆகிய விதைகளும், நன்செய் தரிசில் உளுந்து சாகுபடி செய்ய 5 டன் விதைகளும், யூரியா 385 மெ.டன், டி.ஏ.பி 245 மெ.டன், பொட்டாஷ் 215 மெ.டன் மற்றும் கலப்பு உரங்கள் 403 மெ.டன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் விற்பனை மையங்களில் இருப்பு உள்ளது.

ஒருங்கிணைந்த தானிய உற்பத்தி திட்டத்தின் கீழ் ரூ. 45,000 மானியத்தில் பவர் டில்லர், ரூ. 20,000 மானியத்தில் ரோட்டவேட்டர், 15,000 மானியத்தில் களையெடுக்கும் கருவி விநியோகம் செய்யப்பட உள்ளது என்றார் ஆட்சியர் ரவிக்குமார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. கருப்பசாமி, வேளாண்மை இணை இயக்குநர் குணசேகரன், தோட்டக்கலை துணை இயக்குநர் சுப்பையா, விவசாய சங்கப் பிரதிநிதிகள் உலகநாதன், செங்கமுத்து, ஜெயசந்திரன், ராகவேந்திரன், பிச்சைபிள்ளை, அம்பேத்கர்வலியன், மணி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### விவசாயிகளுக்கு நிவாரண நிதி அளிப்பு

புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினத்தில் விவசாயிகளுக்கு தமிழக அரசின் நிவாரண நிதி வியாழக்கிழமை வழங்கப்பட்டது. கோட்டைப்பட்டினம் வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் நடைபெற்ற விழாவிற்கு, சங்கத்தின் தலைவரும், அதிமுக மணமேல்குடி ஒன்றியச் செயலருமான

எஸ்.எம். அலி அக்பர் பங்கேற்று, விவசாயிகளுக்கு நிவாரண நிதியை வழங்கினார். இந்த சங்கத்தின் மூலம் ரூ 1 கோடியே 4 லட்சம் நிவாரணம் வழங்கப்பட்டது.

## மக்காச்சோளத்தில் அதிக மகசூல்: ஒரு நாள் பயிற்சி

மக்காச் சோளத்தில் அதிக மகசூல் பெறும் நவீன தொழில்நுட்பம் குறித்த ஒரு நாள் பயிற்சி செவ்வாய்க்கிழமை (மே 28) வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெறும்.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட தகவல்:

தமிழகத்தில் சாகுபடி செய்யப்படும் தானியப் பயிர்களில் மக்காச் சோளத்தின் முக்கியத்துவம் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. கால்நடை மற்றும் கோழித் தீவன தயாரிப்புக்கு மக்காச் சோளத்தின் தேவை அதிகரித்து வருவதால் இதற்கான சந்தை வாய்ப்புகளும் நன்றாக உள்ளன. மக்காச் சோளம் சாகுபடி செய்யும் போது விவசாயிகள் பல இடர்பாடுகளை சந்திக்கின்றனர். இப்பயிரில் மெக்னீசியம், துத்தநாகம் மற்றும் இரும்புச்சத்து குறைபாடு ஏற்படுவதால் இலைகள் பச்சையம் இழந்து மஞ்சள் நிறமாக மாறி விடுகிறது. மேலும் அடிச்சாம்பல் நோய் தாக்குவதாலும் இலைகள் மஞ்சள் நிறமாக மாறும் மற்றும் இளஞ்செடியில் தண்டு துளைப்பான் தாக்குவதாலும் மஞ்சள் நிறமாக காணப்படும்.

இந்த சந்தேகங்களுக்கு தெளிவான முறையில் தெரிந்து கொண்டு அதற்கு என்னென்ன நடவடிக்கையில் ஈடுபடுவது குறித்து வேளாண் அறிவியல் நிலையம் வம்பனில் ஒரு நாள் நிலையப் பயிற்சி வரும் செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளது. மேலும், விவரங்களுக்கு, வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தை 04322 - 290321, 9944520544 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 19.82 அடியாக இருந்தது

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 19.82 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 22 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## 100% மானியத்தில் சொட்டுநீர்ப் பாசன திட்டம்

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு 5 ஏக்கர் வரை 100% மானியத்தில் சொட்டுநீர்ப் பாசனத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில், வியாழக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு விளக்கம் அளித்து அவர் மேலும் பேசியது: பயிர்கள் சாகுபடி செய்ய செயல் விளக்கத்திடல் அமைக்கவும், இடுபொருள்கள், நடவு செய்தல் ஆகியவற்றுக்காக மானியம் வழங்கப்படுகிறது.

சிறு, குறு விவசாயிகளுக்கு 100% மானிய விலையில் அதிகபட்சமாக 5 ஏக்கர் வரை சொட்டுநீர்ப் பாசனம் அமைத்துத் தரப்படும். மேலும், இதர விவசாயிகள் 75% மானிய விலையில் சொட்டுநீர்ப் பாசனம் அமைத்துக் கொள்ளலாம் என்றார் அவர்.

கூட்டத்தில் வேளாண் அலுவலர்கள், விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## சொட்டுநீர்ப் பாசனத் திட்டத்தில் பயன்பெற இன்று சிறப்பு முகாம்

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் சொட்டுநீர்ப் பாசனத் திட்டத்தின் மூலம் பயன்பெறுவதற்கான சிறப்பு முகாம்கள் சனிக்கிழமை (மே 25) நடைபெற உள்ளன என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தேசிய நுண்ணீர்ப் பாசன இயக்கத் திட்டத்தில், தோட்டக்கலை மற்றும் வேளாண்மை பயிர்களுக்கு சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க சிறு, குறு விவசாயிகளுக்கு 5 ஏக்கர் வரை 100% மானியமும், இதர விவசாயிகளுக்கு 75% மானியமும் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்த புதிய திட்டத்தின் கீழ் விவசாயிகள் பயன்பெற சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள ஆலத்தூர் மற்றும் குன்னம் வட்டாட்சியர் அலுவலகங்களில் சனிக்கிழமையும், வேப்பந்தட்டை மற்றும் பெரம்பலூர் வட்டாட்சியர் அலுவலகங்களில் ஜூன் 1 -ம் தேதியும் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க உள்ள விவசாயிகளுக்கான சிறப்பு முகாம் நடைபெற உள்ளன.

இந்த முகாமில், விவசாயிகளுக்குத் தேவையான கணினி சிட்டா, அடங்கல், நில வரைபடம் மற்றும் சிறு, குறு விவசாயிகளுக்கு சான்று வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க விரும்பும் அனைத்து விவசாயிகளும் தங்களது குடும்ப அட்டை நகல், 3 பாஸ்போர்ட் அளவு புகைப்படங்களுடன் முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என்றார் அவர்.

Dinamalar

**இன்றைய வேளாண் செய்திகள்**

**25.05.2013 A.M**

## தமிழகத்தில் முட்டை விலை 304 காசுகளாக நிர்ணயம்



நாமக்கல் : தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 304 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. .நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 302 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, இரண்டு காசுகள் உயர்த்தி, 304 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 310, பெங்களூரு, 290, மைசூரு, 300, ஹைதராபாத், 255, மும்பை, 290, விஜயவாடா, 255, கோல்கத்தா, 310, பர்வாலா, 253, டில்லி, 263. இவ்வாறு, நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, கிலோ, 58 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, கிலோ, 70 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

25.05.2013 A.M

## தக்கலை வட்டார தோட்டக்கலை சாகுபடியில் சொட்டுநீர் பாசனத்தை பயன்படுத்த விவசாயிகளுக்கு மானியம்

தோட்டக்கலைப் பயிர்களுக்கு தேவைப்படும் நீரின் அளவை விட அதிக அளவு நீர் பயன்படுத்தப்படுவதால் ஏறத்தாழ 40 சதவீதம் நீர் விரயமாகிறது. தோட்டக்கலை பயிர்கள் சாகுபடிக்கு சொட்டு நீர் பாசனம் என்ற நவீன தொழில்நுட்பம் உகந்ததாக காணப்படுவதோடு 50 சதவீதத்திற்கு மேல் பாசன நீரை மீதப்படுத்துகிறது.

சொட்டுநீர் பாசனம் மூலம் கணக்கிடப்பட்ட அளவு நீரை குறிப்பிட்ட கால அளவுக்குள் பயிர் வேர் மண்டலத்திற்குள் மட்டும் குழாய்கள் மூலம் துளித்துளியாக செலுத்தும் போது நீர் விரயம் முற்றிலும் தவிர்க்கப்படுகிறது. சொட்டுநீர் பாசன முறையினால் நீர் பயன்பாட்டு திறன் அதிகரிக்கிறது. அதிகமான பயிர் வளர்ச்சி மற்றும் கூடுதல் மகசூல் கிடைக்கின்றது. களை வளர்ச்சி குறைகிறது. குறைந்த அளவு மின்சாரம் போதுமானது. வேலையாட்கள் கூலி செலவு குறைகிறது. தோட்டக்கலைதுறை மூலமாக தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் சிறு, குறு விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம் அமைக்க 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது.

சொட்டுநீர் பாசன மானியம் பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் 2, சிறு, குறு விவசாயி என்பதற்கு தாசில்தாரிடம் இருந்து பெறப்பட்ட சான்று, நிலத்தின் சிட்டா, 10 (1) அடங்கல், நிலத்தின் வரைபடம், குடும்ப அட்டைநகல், நிலவரி ரசீது போன்ற ஆவணங்களுடன் பத்மநாபபுரம் அரண்மனை அருகில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில் விண்ணப்பித்து பயன்பெறலாம்.

தண்ணீர் வசதி இல்லாத விவசாயிகள் அருகிலுள்ள விவசாயியின் கிணற்றிலிருந்து தண்ணீர் உபயோகப்படுத்தினால் சம்பந்தப்பட்ட விவசாயியிடமிருந்து சம்மத கடிதம் பெற்று இணைத்தும் இந்த திட்டத்தில் பயன்பெறலாம். நடப்பு நிதியாண்டில் தக்கலை வட்டாரத்தில் சொட்டுநீர் பாசன

திட்டம் செயல்படுத்திட தோட்டக்கலை பயிர்களுக்கு 40 எக்டரும், இதர பயிர்களுக்கு 10 எக்டரும் ஆக மொத்தம் 50 எக்டர் இலக்கு பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட தகவலை தக்கலை வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் யோ.ஷீலாஜாண் தெரிவித்துள்ளார்.

## ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் சின்னவெங்காயம், தக்காளி விலை உயர்வு

ஸ்ரீவில்லிபுத்தூர்,

ஸ்ரீவில்லிபுத்தூர் காய்கறி மார்க்கெட்டில் நேற்று சின்னவெங்காயம், தக்காளியின் விலை கடுமையான உயர்ந்து இருந்தது. தொடர்ந்து முகூர்த்த நாட்கள் இருப்பதால் இந்த விலை ஏற்றம் என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். ஸ்ரீவில்லிபுத்தூர் மார்க்கெட்டில் நேற்று சின்னவெங்காயம் முதல் ரகம் ரூ.90–க்கும், நடுரகம் ரூ.80–க்கும் விற்பனையானது. அதே போல் தக்காளி முதல்ரகம் ரூ.65–க்கு விற்பனை செய்யப்பட்டது. சாதாரண ரக தக்காளி ரூ.58–க்கு விற்பனை செய்யப்பட்டது. சின்ன வெங்காயம் விலை ஏற்றத்தால் தற்போது பொதுமக்கள் பெல்லாரி வெங்காயத்தை அதிகளவில் சமையலுக்கு பயன்படுத்தி வருகிறார்கள். இதன் விலை ரூ.26 மட்டுமே. தக்காளியின் விலை அதிகளவில் உயர்ந்து விட்டதால் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் உள்ள ஓட்டல்களில் தக்காளி சட்னி கிடைப்பதில்லை.

## பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் சங்கத்தில் ரூ.43 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் விற்பனை

பெருந்துறை

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் ரூ.43 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் விற்பனையானது.

<u>கொப்பரை தேங்காய் ஏலம்</u>

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று கொப்பரை தேங்காய் ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு பெருந்துறை மற்றும் சுற்றுப்புறப்பகுதியில் இருந்து விவசாயிகள் 2,131 மூட்டைகளில் 1 லட்சத்து 6 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய்களை கொண்டு வந்திருந்தனர்.

இதில் முதல் தரம் கொப்பரை தேங்காய் கிலோ ஒன்று 41 ரூபாய் முதல் 42 ரூபாய் 80 காசுக்கும் ஏலம் போனது.

2–ம் தர கொப்பரை தேங்காய் கிலோ ஒன்று 33 ரூபாய் 60 காசு முதல் 40 ரூபாய் 65 காசுக்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.43 லட்சத்துக்கு விற்பனையானது.

<u>தேங்காய்</u>

பெருந்துறை வாரச்சந்தையில் 2 லட்சம் தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டுவந்திருந்தார்கள். முதல் தரம் தேங்காய் 5 ரூபாய் முதல் 6 ரூபாய்க்கும், 2–ம் தரம் தேங்காய் 4 ரூபாய் முதல் 5 ரூபாய்க்கும், 3–ம் தரம் தேங்காய் 3 ரூபாய் முதல் 4 ரூபாய்க்கும் விற்றது.

மொத்தம் ரூ.10 லட்சத்துக்கு தேங்காய் விற்பனையானது.

## கோவையில் 29–ந் தேதி நடக்கிறது விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

கோவை

கோவை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் குறைகளை தீர்க்கும் வகையில் ஒவ்வொரு மாதமும் குறைதீர்க்கும் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி இந்த மாதத்துக்கான கூட்டம் வருகிற 29–ந் தேதி (புதன்கிழமை) காலை 10 மணிக்கு கோவை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வைத்து நடக்கிறது.

இந்த கூட்டத்தில் கலெக்டர் கருணாகரன் தலைமை தாங்கி, விவசாயிகளிடம் இருந்து மனுக்களை பெறுகிறார். மேலும் இதில் அனைத்துத்துறை அதிகாரிகள் பங்கேற்பதால், விவசாயிகள் கலந்து கொண்டு வேளாண்மை தொடர்பான பிரச்சினைகளை மனுவாக எழுதி கொடுத்து பயன்பெறலாம் என்று கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) தெரிவித்து உள்ளார்.

## சென்னை செங்குன்றம் அருகே விவசாய பொருள் பதப்படுத்தும் பயிற்சி ஜூலை 1–ந்தேதி தொடங்குகிறது

சென்னை

சென்னை செங்குன்றம், அலமாதி அருகே உள்ள கொடுவளியில் உள்ள உணவு மற்றும் பால் வளத்தொழில் நுட்பக்கல்லூரியில் விவசாய பொருட்களை எவ்வாறு பதப்படுத்தலாம் என்பது குறித்த பயிற்சி ஜூலை 1–ந்தேதி முதல் ஜூலை 31–ந்தேதி வரை நடைபெற உள்ளது.இந்த

பயிற்சியின்போது மதிய உணவு, தங்கும் இடம் ஆகியவை இலவசமாக வழங்கப்படும். ஆர்வம் உள்ள அனைவரும் கலந்துகொள்ளலாம். மேலும் தகவல் அறிய 044–27680214 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம்.இந்த தகவலை உணவு மற்றும் பால் வளத்தொழில் நுட்பக்கல்லூரியின் முதல்வர் தெரிவித்துள்ளார்.